**தலைப்பு 124 - சமூக சேவைகள் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தியிலிருந்து ஒவ்வொரு தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காணப்படுகின்றன.

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 216 | சமூக சேவைகள் திணைக்களம் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

மேற்படி 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சமூக சேவைகள் அமைச்சு மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை கீழ்க் குறிப்பிடப்பட்ட திகதிகளில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வுமற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது செவ்வை பார்த்தலின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

| தலைப்பு | அமைச்சு/திணைக்களம் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 124 | சமூக சேவைகள்அமைச்சு | 2015.08.07 |
| 216 | சமூக சேவைகள் திணைக்களம் | 2015.08.07 |

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணிவருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 4,503 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இதில் ரூபா 4,418 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி அமைச்சு மற்றும் திணைக்களத்தின் தேறிய ஏற்பாட்டிலான சேமிப்பு முறையே ரூபா 57 மில்லியன் மற்றும் ரூபா 28 மில்லியனாக இருந்தது. அது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய ஏற்பாட்டில் முறையே 1.4 சதவீதம் மற்றும் 6.1 சதவீதமான பெறுமானத்தை கொண்டிருந்தது. விபரம் பின்வருமாறு.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடுகள் | பயன்பாடுகள் | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 124 | 4,048 | 3,991 | 57 | 1.4 |
| 216 | 455 | 427 | 28 | 6.1 |
| **மொத்தம்** | **4,503** | **4,418** | **85** | **1.9** |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களத்திற்குரித்தான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் பின்வருமாறாகும்.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 12401 | 7.0 | 6.4 | 3.5 | 7.3 | 45.0 | 19.0 |
| 21601 | 15.0 | 12.1 | 11.2 | 13.3 | 80.0 | 51.0 |

## 2.3 கட்டுநிதிக் கணக்குகள்

சமூக சேவைகள் அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 0.2 மில்லியன் ஆகும்.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7.6 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| அமைச்சு / திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா மில்லியன் |
| சமூக சேவைகள் அமைச்சு | 6000/0000/000/0015/0037/000 | 6.7 |
| சமூக சேவைகள் திணைக்களம் | 6000/0000/000/0015/0097/000 | 0.9 |
| மொத்தம் | | 7.6 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சமூக சேவைகள் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள சமூக சேவைகள் திணைக்களம் என்பவற்றின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பில் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கு இணங்க திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தது. . அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான அவதானிப்புக்கள் 3 முதல் 4 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு- 124 - சமூக சேவைகள் அமைச்சு

### 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன், குறித்த பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | நட்டங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | தொலைபேசி அழைப்புப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 850 | பேணப்பட்டிருக்கவில்லை |
| (இ) | கேள்வி கோரல் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டி கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) | நிலையானச் சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (உ) | வாகனப் நிரற்படுத்தல் பதிவேடு | நிதிப் பிரமாணம் 1647 (உ) | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |

### 3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைக்குட்பட்ட பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் முன்வைக்கப்படாமையால் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(அ) மலேசியாவின் பௌத்த சங்கமொன்றினால் சமூக சேவைகள் அமைச்சருக்கு நன்கொடையளிக்கப்பட்ட சக்கர நாற்காலி, ஊன்றுகோல் மற்றும் நடையுதவி உபகரண இருப்பிற்காக அகற்றல் கட்டணமாக ரூபா 264,901 செலுத்தப்பட்டிருந்ததெனினும், அந்தப் பொருட்களை பங்கீடு செய்தல் தொடர்பான தகவல்கள் மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்டு இந்த நடவடிக்கை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு போதியளவான தகவல்கள்,

(ஆ) ஐக்கிய அமெரிக்க நிறுவனமொன்றினால் சிங்ஹ சமூகத்தின் உத்தியோகத்தரொருவருக்கு அனுப்பப்பட்டிருந்த பால்மா இருப்பிற்கான அகற்றல் கட்டணமாக ரூபா 135,229 செலுத்தப்பட்டிருந்ததெனினும் அந்தப் பொருட்கள் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டதற்கான அல்லது பகிர்ந்தளிக்கப்பட்ட விதம் தொடர்பான தகவல்கள்,

(இ) நான்கு நிறுவனங்களுக்கு தீர்வை வரிச்சலுகைகளை பரிந்துரை செய்யும் போது, குறித்த நிறுவனங்களுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தங்கள்,

(ஈ) 02 நிறுவனங்களுக்கு தீர்வை வரிச்சலுகைகளை வழங்கும் போது 4,689,220 பெறுமதியான பொருட்களை பகிர்ந்தளித்தல் சமூக சேவைகள் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இடம்பெற வேண்டுமென வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தினால் குறிப்பிடப்பட்டிருந்ததெனினும், பொருள் பகிர்ந்தளிப்பு சமூக சேவைகள் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இடம் பெற்றமையை உறுதிப்படுத்த தேவையான சான்றுகள்,

(உ) முன்னாள் சனாதிபதியின் உரைகளடங்கிய தலைமைத்துவத்தின் தலைப்பு புத்தகத்தினை அச்சிடுவதற்காக அரச பத்திரிக்கை நிறுவனமொன்றிற்கு 2014 பெப்ரவரி 26 ஆந் திகதி ரூபா 100,000 செலுத்தப்பட்டிருந்ததெனினும், உரிய புத்தகங்கள் அச்சகத்திலிருந்து பின்னர் பெறப்பட்டதாக அல்லது புத்தகங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதாக இருப்புப் பதிவேடுகளின் பதிவுகள்,

(ஊ) 2001 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை 115 சிசுநென நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டு 22 நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. 2014 ஆம் ஆண்டில் 40 நிலையங்களைக் கண்காணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், 20 நிலையங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராததுடன், குறித்த 20 நிலையங்களில் கண்காணிப்பு நிலையங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள்,

(எ) பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் மாவட்ட செயலாளர் அலுவலகங்களில் 378 மதியுரை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததெனினும், அந்த மதியுரை நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தியமையை உறுதிப்படுத்துவதற்கு 57 அலுவலகங்களால் முன்வைக்கப்படவேண்டிய செயன்முன்னேற்ற அறிக்கைகள்,

(ஏ) 24 மணித்தியாலங்களும் தொலைபேசியூடாக 48,000 பேருக்கு மதியுரை சேவைகளை வழங்குவதை நோக்காகக் கொண்டு அதற்காக ரூபா 360,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டில் 46,316 நபர்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டிருந்ததாக செயன்முன்னேற்ற அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்ததெனினும், அவற்றை உறுதிப்படுத்துவதற்கான எழுத்து மூல சான்றுகள்,

(ஐ) தேசத்திற்கு மகுடம் கண்காட்சியுடன் இணைந்ததாக பிரதேச செயலாளர் அலுவலக மட்டத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 1,235,000 பெறுமதியான 160 சக்கர நாற்காலிகளைப் பெற்றுக்கொண்ட நபர்கள் தொடர்பான தகவல்கள்,

(ஒ) பல்வேறு இடங்களில் நடாத்தப்படுவதாக தகவல்கள் முன்வைக்கப்பட்டிருந்த நடமாடும் சேவைகளுக்காக வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்ட ரூபா 1,610,290 பெறுமதியான 132 சக்கர நாற்காலிகளைப் பகிர்ந்தளித்தல் தொடர்பான விபரங்கள்,

(ஓ) பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கு ரூபா 225,550 பெறுமதியான 347 மூக்குக்கண்ணாடிகள் அனுப்பப்பட்டிருந்ததெனினும், அந்த மூக்குக் கண்ணாடிகள் உரிய நலனாளிகளுக்கு கையளிக்கப்பட்டமையை உறுதிப்படுத்தும் சான்றுகள்

(ஔ) 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியினுள் அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கைத்தொலைபேசிகள் தொடர்பான தகவல்கள்,

(க) 05 தன்னார்வ ஒழுங்கமைப்புக்களால் தீர்வை வரிச்சலுகை விண்ணப்பிக்கும் போது, பொருட்களின் பங்கீடு சமூக சேவைகள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் இடம்பெற வேண்டுமென சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர்/ மேலதிக சமூக சேவைகள் திணைக்களத்தின் செயலாளரினால் (நிர்வாகம்) நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு பகிர்ந்தளித்தல் தொடர்பில் கண்காணிப்பொன்று இடம்பெற்றமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள்,

(கா) அசரண சரண சங்கமொன்றிற்கு செயற்கைக் கால்களின் உற்பத்திக்குத் தேவையான ரூபா 907,951 பெறுமதியான மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்காக தீர்வை வரிச்சலுகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததெனினும், அந்த சேவை விடயத்தினை பகிர்ந்தளிக்கும் போது சமூக சேவைகள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள்,

### 3.3 ஒதுக்கீட்டு கணக்குகள்

---------------------------------

#### 3.3.1 பாதீட்டு முரண்கள்

------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான 16 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 21,416,302 கூட்டுத்தொகையான அல்லது 10 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் நிதி ஏற்பாடு எஞ்சியிருந்தது.

#### 3.3.2 வகைப்படுத்தல் வழுக்கள்

-------------------------------------

மீளாய்வாண்டில் அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்களுக்கான எரிபொருள் கட்டளைகளின் அடிப்படையில் எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்காக கூட்டுமொத்தமாக ரூபா 334,660 செலவிடப்பட்டிருந்ததுடன், இந்த செலவினங்கள் எரிபொருளுக்கான சரியான செலவின விடயத்தில் கணக்கு வைக்கப்படாமல் அது சமூகத்திலுள்ள கைவிடப்பட்ட குழுக்களை வலுப்படுத்தும் செலவின விடயத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

#### 3.3.3 பொறுப்புக்களைக் குறைத்துக் காட்டுதல்

---------------------------------------------------------

2014 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 15,210,919 தொகையான செலவினமொன்று 2015 ஆம் ஆண்டு செலுத்தப்பட்டிருந்ததெனினும், அந்தப் பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் ரூபா 11,909,783 எனுமாறு காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 3,301,136 தொகையான பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் குறைத்துப் பதியப்பட்டிருந்தது.

### 3.4 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் புத்தகங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான தீர்க்கப்படாத உப கட்டுநிதி மீதி ரூபா 253,986 ஆக இருந்த போதிலும் ஒதுக்கீட்டுக் கணக்கில் அது பூச்சிய பெறுமதியாக காட்டப்பட்டிருந்தது. திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 9,153,986 ஆக இருந்தது.

### 3.5 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 வருடங்களை விஞ்சிய ரூபா 963,624 கூட்டுத்தொகையான 37 வைப்புக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 565 (5) இன் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திற்காகவும் பொது 71 படிவத்தில் தயாரிக்கப்படும் மாதாந்த வைப்பு பொழிப்பறிக்கையொன்று அதற்கடுத்த மாதம் முடிவடைவதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டுமெனினும், அமைச்சினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்

விடய இல 12401 இன் முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில்தயாரிக்கப்பட்டிருந்த இணக்கக்கூற்றுக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அமைச்சினால் பேணப்பட்ட கட்டுப்பாட்டுக் கணக்குகளில் சில ஆண்டுகள் முதல் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 187,756 தொகையான சீராக்கல் பதிவொன்று காண்பிக்கப்பட்டிருந்ததெனினும், அது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இனங்காணப்பட்டு சீராக்கப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சேவையிலிருந்து விலகிச்சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து 13 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 41,530 தொகையான கடன் மீதியினை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| **(அ)** | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவை | | |
| | நிதிப் பிரமாணம் 104(1)(3)(4) | | 08 வாகனங்களுக்கு நேர்ந்துள்ள அவசர விபத்துக்கள் தொடர்பாக விசாரணைகள் நடாத்தி பூர்வாங்க அறிக்கைகள் மற்றும பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| **(ஆ)** | **சனாதிபதி செயலகத்தின் சுற்றிக்கை** | | |
| | 2010 மே 14 ஆந் திகதிய ஜ.லே/1/17/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.5 ஆம் பந்தி | 93,927 | அமைச்சர்களின் கையடக்கத் தொலைபேசிகளுக்காக மாதாந்தம் ஆகக்கூடிய செலவின எல்லை ரூபா 10,000 ஆக இருந்ததெனினும், 2014 ஏப்ரல் மாதத்தில் தொலைபேசி செலவினமாக ரூபா 93,927 செலுத்தப்பட்டிருந்தது. |
| **(இ)** | **அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவை** | | |
| | 3.6 வழிகாட்டி | 2,653,950 | கேள்வி கோரப்படாமல் 17,643 மூக்குக் கண்ணாடிகள் 2014 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

## 3.8 வெளிநாட்டு உதவிச் செயற்றிட்டங்கள்

மீளாய்வாண்டின் போது செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக ரூபா 210,208,325 அமைச்சிற்கு கிடைத்திருந்ததுடன், அந்தத் தொகையில் 67 சதவீதம் அல்லது ரூபா 140,160,000 அங்கவீனமுற்றோருக்கு நிதியுதவிகள் வழங்குவதற்காகவும், 5 சதவீதம் அல்லது ரூபா 10,819,680 தொகை தொழிற்பயிற்சியினை வழங்குவதற்காகவும் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

### (அ) நிதியுதவிக் கணக்குகள்

நிதியுதவிக் கணக்குகளிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் உரிய நலனாளிகளின் கணக்குகளுக்கு (கணக்கு இலக்கம் தவறாகுதல், அங்கீகரிக்கப்படாத இலக்கங்களை வழங்குதல் மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில்) செலவு வைக்கப்படாமல் ரூபா 2,901,000 தொகை அமைச்சிற்கு திருப்பியனுப்பப்பட்டிருந்தது.

(ii) தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் 05 உதவிபெறுநர் கணக்குகளுக்கு மாதாந்தம் செலவு வைப்பதற்கு அனுப்பப்படும் பணம் தொடர்ந்து சில மாதங்களாக அமைச்சிற்கு திருப்பியனுப்பப்பட்டிருந்ததுடன், அந்தக் கணக்குகள் தொடர்பில் இனங்காணல் நடவடிக்கைகள் மற்றும் அதற்குரிய வழிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) ஊனமுற்றோருக்கு தொழிற்பயிற்சிகளை வழங்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 நவம்பர் 30 ஆந் திகதி உலக வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு முதல் தொழிற்பயிற்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனினும், அங்கவீனமுற்றோருக்கான தொழிற்பயிற்சி நடவடிக்கைகள் காலந்தாமதித்து 2014 யூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

(ii) 2013 ஆம் ஆண்டு முதல் 2014 திசெம்பர் வரை இந்த செயற்திட்டத்திற்காக அமைச்சு செலவிட்ட மொத்த தொகை ரூபா 228,193,680 ஆக இருந்ததுடன், அந்த தொகையில் ரூபா 10,819,680 அல்லது 4.7 சதவீதம் மாத்திரம் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தொழில்சார் பயிற்சிகளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

(iii) நிறுவகங்களுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் நிபந்தனை இலக்கம் 03 (D) பின்னிணைப்பு A இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம், அந்த நிறுவகங்களின் மாதாந்த செயன்முன்னேற்றம் மற்றும் செலவின அறிக்கைகள் அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமெனினும் 66 நிறுவனங்களால் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 செயலாற்றல்**

---------------------

2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

**(அ) பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள் ( நோக்கத்திற்கு முரணாதல் போன்றன)**

--------------------------------------------------------------------------------------------------------------------------------

அமைச்சு தனது நோக்கங்களுக்குரிய செயற்பாடுகளிலிருந்து விலகி செயற்பட்ட சந்தர்ப்பங்கள் கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(i) முன்னாள் சனாதிபதியின் பதவிப் பூர்த்திக்காக தனியார் ஊடக நிறுவனமொன்றினால் வெளியிடப்பட்ட அமைச்சு அறிவித்தலுக்காக ரூபா 130,637 செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த செலவினம் 124-2-5-1-1501(2) ஆம் இலக்க சமூகத்திலுள்ள கைவிடப்பட்ட குழுக்களைப் பலப்படுத்தும் செலவின விடயத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ii) சிறுவர் நிலையங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ''எனீ லொறி'' மொழிபெயர்க்கப்பட்ட 100 புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 25,000 செலவிடப்பட்டிருந்தது. 2015 யூன் 23 ஆந் திகதியான கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் அந்தப் புத்தகங்களைப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்காமல் களஞ்சியத்தில் தக்கவைக்கப்பட்டிருந்தன.

**(ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அநுராதபுரம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 05 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு நீர் சுத்திகரித்தல் இயந்திரங்களை வழங்குவதற்காக 2014 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க மாற்றல் பத்திரத்தின் மூலம் ரூபா 1,000,000 தொகையான நிதியேற்பாடுகள் மாற்றப்பட்டிருந்ததெனினும் உரிய செயற்பாடு நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) மதியுரைப் பிரிவிற்குரிய பிரதான பணிகளான மதியுரை சேவைகளுக்கான தேசிய கொள்கையொன்றினைத் தயாரிக்கும் செயற்பாடுகள், மதியுரை சேவைகள் தொடர்பில் நியமங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் பிரதேச செயலாளர் மட்டத்தில் மதியுரை சேவை நிலையங்களை நிர்மாணித்தல் போன்ற நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டில் இடம்பெற்றிருக்கவில்லை.

(iii) மதியுரைப் பிரிவிற்காக ரூபா 12,000,000 தொகையான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததெனினும், மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றுள் 12 சதவீதம் அல்லது ரூபா 1,409,189 தொகையான நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமல் எஞ்சியிருந்தது. உரிய பிரதேச நிகழ்ச்சித்திட்டங்கள் ஆண்டினுள் உரிய பிரகாரம் இடம்பெற்றிருக்கவில்லை என்பதுடன், அவை தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) செயற்முன்னேற்ற அறிக்கைகளில் உண்மையான செயலாற்றல் நிலை வெளிப்படுத்தப்படாமை**

---

மதியுரைகளுக்குரிய குறிப்புக்கள் மற்றும் நாளேடுகளை அச்சிடுவதற்கு ரூபா 741,417 செலவிடப்பட்டிருந்ததுடன், செயன்முன்னேற்ற அறிக்கைகளில் அந்த செலவினம் ரூபா 689,000 என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 52,417 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**(ஈ) திட்டமிடலில் நலிவுகள்**

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) 2014 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 500 குடும்பங்களுக்கு தனியான மாபிய முறைமையின் கீழ் சுய தொழில் உதவு தொகைகளை வழங்குவதற்காக ரூபா 6,000,000 தொகையான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2014 ஆண்டிற்கான செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ரூபா 6,563,000 பயன்படுத்தப்பட்டு 588 குடும்பங்களுக்கு சுயதொழில் உதவி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முறையான திட்டமிடலின்றி ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு ரூபா 563,000 இனால் விஞ்சி இலக்கிடப்பட்ட எண்ணிக்கையை விட 88 குடும்பங்களுக்கு சுய தொழில் உதவிகள் வழங்கப்பட்டிருந்தன. நுவரெலியா, மாத்தளை, அநுராதபுரம், திருகோணமலை, அம்பாந்தோட்டை மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு இந்த உதவுதொகைகள் பகிர்ந்தளிக்கப்பட்டிராததுடன் சில மாவட்டங்களில் கூடுதலான எண்ணிக்கையான நலனாளிகளுக்கு உதவு தொகைகள் வழங்கப்பட்டிருந்ததெனினும், சில மாவட்டங்களில் குறைந்தளவான நலனாலிகளுக்கே உதவு தொகைகள் வழங்கப்பட்டிருந்தன.

(ii) 25 மாவட்டங்களில் தனியான மாபிய உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறு குழுக்களுக்கு சுய தொழிலுக்காக வழங்கப்பட்ட உதவிகள் களுத்துறை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

**(உ) திட்டமிடப்பட்டவாறு எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் மட்டத்தினை அண்மிக்காமை**

------------------------------------------------------------------------------------------------------------------------------

அமைச்சினால் மீளாய்வாண்டில் சுய தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2014 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 40 தனியான மாபிய குடும்பங்களின் 70 உறுப்பினர்களுக்காக சிறு குழுக்களாக சுயதொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக ரூபா 900,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அவற்றுள் ரூபா 360,000 அல்லது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 40 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) சிறு குழுக்கள் (தனியான மாபிய) சுயதொழில் உதவிகளை வழங்குவதற்கு 40 அங்கத்தவர்கள் இலக்கிட்டிருந்த போதிலும், 26 அங்கத்தவர்களுக்கு மாத்திரம் உதவிகள் வழங்கப்பட்டிருந்தன. அதனால் அதன் செயன்முன்னேற்றம் 65 சதவீதமாக இருந்தது.

(iii) கடந்த ஆண்டில் 08 மாவட்டங்களில் ரூபா 630,000 செலவிட்டு 10 சுயதொழில் வேலைவாய்ப்பு அபிவிருத்தி நிக்ழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் ரூபா 360,000 செலவிட்டு 02 மாவட்டங்களில் 03 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

(iv) மீளாய்வாண்டில் 10 சுயதொழில் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு ரூபா 100,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 77,316 செலவிட்டு 05 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் நிதி செயன்முன்னேற்றம் 77 சதவீதமாகியிருந்ததுடன் பௌதீக முன்னேற்றம் 50 சதவீதமாகியிருந்தது. மீளாய்வாண்டின் 588 நபர்களுக்கு ரூபா 6,922,000 தொகையான சுயதொழில் உதவிகள் வழங்கப்பட்டிருந்ததெனினும், அதன் செயன்முன்னேற்றம் தொடர்பான அறிக்கை உரிய பிரிவிற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(v) 13 இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 2,000,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றுள் ரூபா 1,527,000 செலவிடப்பட்டு 09 நிகழ்ச்சித்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் இலக்கிடப்பட்ட எண்ணிக்கையை விட 04 நிகழ்ச்சித்திட்டங்கள் குறைத்து நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் நிதி செயன்முன்னேற்றம் 76 சதவீதமாக இருந்ததுடன் பௌதீக செயன்முன்னேற்றம் 69 சதவீதமாக இருந்தது.

(vi) செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் வெளியீட்டு நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,500,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 35,000 துண்டுப்பிரசுரங்களை அச்சிடுவதற்கும், 1500 மதியுரை சஞ்சிகைகளை அச்சிடுவதற்கும் ரூபா 689,000 செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் இதன் நிதிசார் செயல்முன்னேற்றம் 46 சதவீதமாக இருந்தது.

(vii) 2014 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம், ரூபா 5,040,000 நிதியேற்பாடுகளை ஏற்படுத்தி 475 அறிவூட்டல் மதியுரை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் இறுதியளவில் 413 மதியுரை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி ரூபா 3,596,000 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதன்

நிதிசார் செயல்முன்னேற்றம் 71 சதவீதமாக இருந்ததுடன் பௌதீக செயல்முன்னேற்றம் 87 சதவீதமாக இருந்தது.

### 3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) சமூக உதவிச் செயலமர்வொன்றிற்கு பங்குபற்றுவதற்காக மூன்று உத்தியோகத்தர்களால் ரூபா 168,250 தொகையான முற்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததெனினும், அந்த உத்தியோகத்தர்கள் குறித்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்குபற்றியிராததுடன், அந்த பணம் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு முறையற்ற விதத்தில் கையளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) Voice செயற்திட்டத்தின் செயற்பாடுகளுக்காக உள்நாட்டு நிதிகள் எதிர்பார்க்கப்பட்டிராததுடன், அச்செயற்திட்டத்தின் காலப்பகுதியை நீடிப்பு செய்வதற்காக 2014 யூன் 07 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந்தச் செயற்திட்டத்திற்கான இரு தொலைபேசிகளுக்கு முறையே ரூபா 65,723 மற்றும் ரூபா 30,065 எனுமாறு ரூபா 95,788 கூட்டுத்தொகை அமைச்சின் நிதியேற்பாடுகளிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதி தேசிய மதியுரைச் சேவைகள் தினத்திற்கான மதியுரைச் சஞ்சிகையில் 1500 பிரதிகள் அச்சிடப்பட்டிருந்தன. விலை மனுக்கள் கோரப்படாமல் தொலைபேசியூடாக விசாரித்து ரூபா 509,796 செலவிடப்பட்டு சஞ்சிகையின் பிரதிகள் அச்சிடப்பட்டிருந்தன. வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினூடாக இதற்காக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், வருடம் ஆரம்பித்து 10 மாதங்கள் கடந்திருந்த போதிலும் கொள்வனவு நடைமுறையினைப் பின்பற்ற அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.11 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானவையாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

(அ) கம்பஹா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 845 ஊனமுற்றோர்களுக்கு ரூபா 3,000 படி ரூபா 2,535,000 செலுத்த வேண்டி இருந்ததெனினும், 2014 திசெம்பர் மாதத்தில் 124-2-2-1-1501 கொண்ட செலவின விடயத்தில் ரூபா 9,352,347 தொகையான அசாதாரணமான செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) முன்னாள் அமைச்சுச் செயலாளரால் 2014 சனவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரைப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த எரிபொருள் படி ரூபா 382,050 ஆக இருந்ததுடன், அந்த காலத்திற்குரிய ரூபா 754,505 தொகையான மேலதிக எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இது எரிபொருள் படியினைப் போன்று 197 சதவீதமாகி இருந்தது.

(இ) முன்னாள் விடயப்பொறுப்பு அமைச்சரின் இணைப்புச் செயலாளரால் அமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம் எனக் குறிப்பிட்டு கோரிக்கை முன்வைத்து ரூபா 694,760 பெறுமதியான 54 சக்கர நாற்காலிகள் பெறப்பட்டிருந்ததுடன் அந்த சக்கர நாற்காலிகள் விடயப்பொறுப்பு அமைச்சரின் இல்லத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சக்கர நாற்காலிகள் குறைந்த வருமானம் பெறும் ஊனமுற்றோருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டமைக்கான எதுவித சான்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதேச செயலாளர் அலுவலகங்களுடாக முன்வைக்கப்பட்ட தகுதியுடைய குறைந்த வருமானம் பெறும் ஊனமுற்றோர்களின் கோரிக்கைகளைக் கவனத்திற் கொள்ளாமல், அமைச்சர்கள், சனாதிபதி செயலாளர் அலுவலகத்திற்கும் சனாதிபதியின் பாரியாருக்கும் ரூபா 2,050,400 பெறுமதியான 127 சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டிருந்தன.

(உ) 2014 திசெம்பர் 04 ஆந் திகதி நடாத்தப்பட்ட சர்வதேச ஊனமுற்றோர் தின விழாவிற்காக அமைச்சினால் ரூபா 7,524,173 செலவிடப்பட்டிருந்தது. அந்த செலவினங்களுள் உணவுகளுக்காக ரூபா 1,018,625 தொகையும், போக்குவரத்து செலவினங்களுக்கான ரூபா 1,374,530 தொகையும், பரிசுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான ரூபா 2,250,000 தொகையும் அச்செலவில் உள்ளடங்கியிருந்தது. அமைச்சினால் முதலில் திட்டமிடப்பட்டவாறு பங்குபற்றும் ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை 1,410 என குறிப்பிடப்பட்டிருந்ததெனினும், சமர்ப்பிக்கப்பட்ட உணவு விலையப்பட்டியல்களின் பிரகாரம் அந்த எண்ணிக்கை 4,000 ஆக இருந்தது.

## 3.12 நிதி முறைகேடுகள் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட மோசடித்தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு

(அ) ஊனமுற்றோருக்காக உதவி உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் அவற்றை பகிர்ந்தளித்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையில் 6,493 மூக்குக் கண்ணாடிகளுக்காக ரூபா 979,950 தொகையான போலியான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) முன்னாள் சமூக சேவைகள் அமைச்சரின் இணைப்புச் செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டதாக பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 1,267,500 பெறுமதியான 1950 தூரப்பார்வை மற்றும் கிட்டப்பார்வை மூக்குக்கண்ணாடிகள் நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டமையை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) புனித அந்தோனியார் தேவாலயத்தில் கண் சிகிச்சையொன்றினை நடாத்தி மூக்குக் கண்ணாடிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லையெனினும், மூக்குக் கண்ணாடிகள் பகிர்ந்தளிக்கப்பட்டதாக போலியான நபர்களின் பெயர்ப்பட்டியலொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மொனராகலை மாவட்டத்தின் பிரதேச செயலாளர் அலுவலகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருக்கவில்லையெனினும், மொனராகலை மாவட்டத்தின் சமூக சேவைகள் உத்தியோகத்தர்களின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ இலட்சினை ஆகியவற்றை தவறாக பயன்படுத்தி நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டதாக குறிப்பிட்டு ரூபா 150,000 தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(உ) அமைச்சரின் இணைப்புச் செயலாளரால் ஜா-எல, திக்கந்த கடுவக்கொட மற்றும் களனி, நாகியாதெனிய ஆகிய இடங்களில் நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டதாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் ரூபா 523,950 செலுத்தப்பட்டிருந்தது.

## 3.13 முகாமைத்துவ நலிவுகள்

-----------------------------------

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன

(அ) மூக்குக் கண்ணாடிகளை பகிர்ந்தளிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையொன்று மற்றும் பொறிமுறையொன்று இருக்கும் போது அதற்கு முரணாக வெளித்தரப்பினரின் தலையீடொன்று இடம்பெற்றிருந்தமையால் குறைந்த வருமானம் பெறும் ஊனமுற்றோருக்கு ஒதுக்கப்பட்ட பணத்தின் நலன்கள் அவர்களுக்கு கிடைத்திராததுடன் மோசடியான பதிவேடுகளை சமர்ப்பித்து பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) நடமாடும் சிகிச்சைகளின் போது பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த மூக்குக் கண்ணாடிகள் வழங்குநரால் உரிய நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த மூக்குக் கண்ணாடிகள் உரிய ஏற்பாடுகளுக்கு இணங்க வழங்குநரால் வழங்கப்பட்டிருந்ததாக அமைச்சினால் உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச செயலாளர்கள், சமூக சேவை உத்தியோத்தர்கள் மற்றும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஊடாக தேவைப்பாடுடையவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் நடைமுறையொன்று உள்ளபோது, அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் அரசியல் தலையீட்டின் அடிப்படையில் குறைந்த வருமானம் பெறும் ஊனமுற்ற நபர்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

(ஈ) மூக்குக் கண்ணாடிகளை பகிர்ந்தளிக்கும் நடமாடும் சேவையின் போது மூக்குக் கண்ணாடி பெறுநர்களின் வருமான மட்டம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிராமையால், குறைந்த வருமானம் பெறும் நபர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உதவிகள் வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(உ) நிலவும் விதந்துரைகளின் பிரகாரம், மூக்குக்கண்ணாடிகளை வழங்குவதற்கான தகைமையானது மாதாந்த வருமானம் ரூபா 6,000 இனை விட குறைந்த வருமானம் பெறும் பார்வைக்குறைபாடுகளுள்ள நபர்களுக்காகும். அவ்வாறான நபர்கள் தொடர்பில் ஆய்வொன்றினை மேற்கொள்ளாமல் 121,786 கிட்டப்பார்வை மூக்குக் கண்ணாடிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் வலையமைப்பொன்றும் நிருவாக ரீதியான பொறிமுறையொன்றும் உள்ளபோதிலும், அதனை கவனத்திற்கொள்ளாமல் செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.14 மனிதவள முகாமைத்துவம்

-----------------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

-----------------------------------------------------------------------------------------------------------------------------

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 16 | 11 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 424 | 252 | 172 |
| (iv) | ஆரம்ப நிலை | 60 | 53 | 07 |
| (v) | ஏனையோர் (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 01 | 01 | - |
| | **மொத்தம்** | **504** | **319** | **185** |

## 4. தலைப்பு 216 – சமூக சேவைகள் திணைக்களம்

-----------------------------------------------------------------------

## 4.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

-----------------------------------------------------------

பின்வரும் அங்கீகாரங்கள், பதிவேடுகள், பற்றுச்சீட்டுக்கள் மற்றும் உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அந்த கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(அ) தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு ஊனமுற்றோர்களுக்கான இணைத்துக்கொள்ளும் போது சமூக சேவைகள் திணைக்களத்தால் பெயரிடப்படும் உத்தியோகர்தரரொருவர் பங்குபற்ற வேண்டிமை 2011 செப்தம்பர் 19 ஆந் திகதிய SS/4/1/1 -1 ஆம் இலக்க சமூக சேவைகள் பணிப்பாளரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு ஊனமுற்றோர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தாலும், அதற்காக திணைக்களத்தினால் பெயரிடப்பட்ட உத்தியோகத்தரொருவர் பங்குபற்றியிருக்கவில்லை. அவ்வாறே இணைத்துக்கொள்ளப்பட்ட பயிற்சி பெறுநர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பதிவேடொன்று அங்கீகாரத்திற்காக

தாமதிக்காது திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படவேண்டுமெனினும், 08 நிறுவனங்களில் ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றிருந்ததெனினும், அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினுள் கல்விகற்கும் அங்கவீனமுற்ற சிறார்களின் விபரங்கள் உள்ளடங்கிய பெயர்ப்பட்டியலொன்றினை திணைக்களம் பேணியிருக்கவில்லை.

(இ) 07 தன்னார்வ தொழிற்பயிற்சி நிறுவனங்களின் 138 பயிற்சி பெறுநர்களுக்காக ரூபா 3.032,423 கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததெனினும், அந்த பணம் பயிற்சி பெறுநர்களுக்கு கிடைக்கப்பெற்றமையை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 07 நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட ரூபா 2,410,473 தொகையான பணத்திற்கான உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தேசிய மனநல சுகாதார மன்றத்திற்கு வருகைத்தரும் பயனாளிகளுக்கான வருகைப்படிகளை செலுத்துவதற்காக ரூபா 376,400 திணைக்களத்தினால் அனுப்பப்பட்டிருந்ததெனினும், பயனாளிகளுக்கு அந்த படிகள் வழங்கப்பட்டமைக்கான எழுத்துமூல சான்றொன்று கிடைத்திருக்கவில்லை.

**4.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---------------------------------

**பாதீட்டு முரண்கள்**

----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 08 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டமையின் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 11.96 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்செல்லையில் காணப்பட்டது.

(ஆ) நிதிப் பிரமாணம் 94(1) இற்கு முரணாக 31 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏற்பாட்டில் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பினை விஞ்சி ரூபா 6,249,662 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(இ) ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள 3 செலவின விடயங்களின் பொறுப்புக்களின் பெறுமதிக்கும் பொறுப்புக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகளுக்குமிடையே ரூபா 11,234 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 4.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

-----------------------------------------------------------------------------------------

விடய இலக்கம் 21601 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் பின்வரும் முறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியின் உள்ளவாறு ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் மரணமடைந்த 13 உத்தியோகத்தர்களின் ரூபா 1,398,844 தொகையான கடன் மீதி தொடர்பில் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5 மற்றும் 4.4 பிரிவுகளின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் சேவையை விட்டுச்சென்ற 04 உத்தியோகத்தர்களின் ஒரு வருடம் முதல் 13 வருடங்கள் வரையான காலமாக முன்கொண்டு வரப்படும் அறவிடப்பட வேண்டிய ரூபா 311,477 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வேலைநீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 4 வருடங்கள் முதல் 19 வருடங்கள் வரையான காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 293,550 கூட்டுத்தொகையான கடன் மீதி 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 பிரிவுகளின் பிரகாரம் செயற்பட்டு அறவிடுவதற்கு தவறியிருந்தது.

### 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலும் ஏனைய நிறுவனங்களுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளிலும் வெளிப்படுத்தப்பட்டிருந்த 271 பொருள் விடயங்களின் பற்றாக்குறையும் 124 பொருள் விடயங்களின் மிகை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
| --- | --- | --- |
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | |
| (i) நிதிப் பிரமாணம் 371 | 55,360 | பணி நிறைவு பெற்றவுடனேயே பெற்றுக்கொள்ளப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீக்கப்பட வேண்டுமெனினும், பணி நிறைவடைந்து 14 நாட்கள் முதல் 35 நாட்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் பெறப்பட்டிருந்த உப கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 104(1)(3) மற்றும் (4) | - | மீளாய்வாண்டில் இடம்பெற்ற 03 வாகன விபத்துக்கள் தொடர்பில் 2015 யூன் 25 ஆந் திகதி வரையிலும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) திறைச்சேரி சுற்றறிக்கை** | | |
| 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | 255,400 | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருட்களை கொள்வனவு செய்யும் போது சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவம் பூர்த்தி செய்யப்படாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

## 4.6 செயலாற்றல்

---------------------

2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத செயற்பாடுகள்

-------------------------------------------------------------------------

திணைக்களத்தால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்பட்டிராததுடன், அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) 700 அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததெனினும், 633 பேருக்கு மாத்திரம் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது.

(ii) பயிற்சிகளை பூர்த்தி செய்த 145 பயிற்சி பெறுநர்களுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததெனினும், 103 பேருக்கு மாத்திரம் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தது.

(iii) 09 அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு நிதியுதவிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 06 அரச நிறுவனங்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

(iv) விசேட தேவையுடைய சிறார்களுக்காக இரத்தினபுரி நகரத்தில் தாபிக்கப்பட்டிருந்த நிலையத்திற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 4,200,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததெனினும், அவற்றுள் ரூபா 447,000 அல்லது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 11 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(v) தன்னார்வ தொண்டர்களை பயிற்றுவிக்கும் 331 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 25 சைகை மொழி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததெனினும், முறையே 231 மற்றும் 11 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

(vi) சமூக அடிப்படை புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தினூடாக நேரடி நலன்களாக கொமட், மின்சாரம், ரூம்ஸ் போன்ற 125 உபகரணங்களை வழங்குவதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததெனினும், அந்த உபகரணங்களில் 117 உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. 25 மாவட்டங்களில் 9 மாவட்டங்களுக்கு எதுவித உபகரணங்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை. களுத்துறை மாவட்டத்திற்கு 28 உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அது ஆகக் கூடிய உபகரணங்கள் வழங்கப்பட்ட மாவட்டமாகும். 16 மாவட்டங்களில் இந்த உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததெனினும், மாவட்டங்களிடையே உபகரணங்களை பகிர்ந்தளிப்பதில் சமநிலையொன்று காணப்படவில்லை.

(vii) சமூக அடிப்படையிலான புனரமைப்பு செயற்திட்டத்தின் கைநூலினை அச்சிடல் மற்றும் ஏனைய அச்சிடல் நடவடிக்கைகளுக்காக ரூபா 200,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அந்த செயற்பாடுகளுக்காக ரூபா 168,000 செலவிடப்பட்டிருந்ததெனினும் செயற்திட்டக் கைநூல் அச்சிடப்பட்டிருக்கவில்லை.

(viii) மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் மட்டத்தில் 25 கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 500,000 செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததெனினும், வருடாந்த செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அவற்றுள் ரூபா 430,000 செலவிடப்பட்டு 12 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. அதன் நிதிசார் செயல்முன்னேற்றம் 86 சதவீதமானதுடன் பௌதீக செயல்முன்னேற்றம் 48 சதவீதமாக இருந்தது.

(ix) புவக்பிட்டிய ஜயவிரு செவன நிறுவனத்தில் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களற்ற மந்த புத்தியுடைய 50 ஆண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு மற்றும் விடுதி வசதிகளை வழங்க முடியுமெனினும், 2014 ஆம் ஆண்டின் போது 47 பிள்ளைகளுக்கு சேவை வழங்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது 100 சிறுவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்குவதற்கு இயலுமான வகையில் கட்டிட நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்காக அதன் முதலாவது கட்டத்திற்காக ரூபா 7 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டிற்கான நிர்மாணப் பணிகள் 2014 ஒக்தோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(x) பிள்ளைகளின் வளர்ச்சியில் ஏதேனும் சிக்கலொன்றோ அல்லது தாமதமொன்றோ உள்ளதாக சந்தேகிக்கும் சந்தர்ப்பமொன்றிலோ அல்லது குறைபாடொன்று உள்ளதாக இனங்காணப்பட்டதன் பின்னர் தொடர்புபடுத்தப்படும் இடமான சிறுவர் வழிகாட்டல் நிலையத்தின் மூலம் 2014 ஆம் ஆண்டின் போது திட்டமிட்ட பின்வரும் செயற்பாடுகளை ஆண்டினுள் நிறைவேற்றிக்கொள்ள தவறியிருந்தது.

- சிறுவர் வழிகாட்டல் நிலையங்களை வியாபித்தல் மற்றும் பிரதேச நிலையங்களை ஆரம்பித்தல் தொடர்பில் மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர்களின் செயலமர்வு.
- சிறுவர் வழிகாட்டல் செயற்திட்டம் தொடர்பான மொனராகலை மாவட்ட உத்தியோகத்தர்களை அறிவூட்டும் ஒருநாள் நிகழ்ச்சித்திட்டம்.
- விசேட தேவைப்பாடுடைய குழந்தைகள் தொடர்பில் முன்பள்ளி ஆசிரியர்களை முனைவு படுத்தல் மற்றும் உள்ளீர்க்கும் சந்தர்ப்பங்களை பரவலாக்குவதற்கான இரண்டு நாள் செயலமர்வுகள் 02 இனை நடாத்துதல் (மொனராகலை மாவட்டம்).
- மேல் மாகாண சமூக சேவை உத்தியோகத்தர்கள், சமூக அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான உத்தியோகத்தர்களை அறிவூட்டல் மற்றும் உரிய பாடசாலைகளுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சிறார்களின் பெற்றோர் மற்றும் கல்வித்துறை அதிகாரிகளின் சந்திப்பு (மேல் மாகாணம்).
- சிறுவர் வழிகாட்டல் செயற்திட்டம் தொடர்பில் பொலன்னறுவை மாவட்ட உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தும் ஒருநாள் நிகழ்ச்சித்திட்டம்.
- விசேட தேவைப்பாடுடைய சிறார்கள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் உள்ளீர்க்கும் சந்தர்ப்பங்களை பரவலாக்குவதற்காக முன்பள்ளி ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி செயலமர்வு (அம்பாறை மாவட்டம்).
- விசேட தேவைப்பாடுடைய சிறார்கள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் உள்ளீர்க்கும் சந்தர்ப்பங்களை பரவலாக்குவதற்காக முன்பள்ளி ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி செயலமர்வு ( கண்டி மாவட்டம்).

### 4.7 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலான குறைபாடுகள்

தொழிற்பயிற்சி நிறுவனங்களிடமிருந்து வங்கிக்கு நேரடியாக கிடைக்கப்பெற்ற ரூபா 37,462 தொகையான பெறுவனவுகள் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.8 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சமூக சேவைகள் திணைக்களத்தில் 2014 ஆம் ஆண்டின் போது தன்னார்வ நிறுவனங்களுக்கான பராமரிப்புச் செலவினமாக ரூபா 1,352,680 தொகை செலுத்தப்பட்டிருந்ததெனினும் அதற்காக முறையான அங்கீகாரமொன்று கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.9 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீரித்த பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 09 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 164 | 125 | 39 |
| (iii) | இரண்டாம் நிலை | 493 | 439 | 54 |
| (iv) | ஆரம்ப நிலை | 97 | 85 | 12 |
| (v) | ஏனையோர் (அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 18 | 09 | 09 |
| | மொத்தம் | 783 | 667 | 116 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த அடிப்படையில் 09 ஊழியர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

(ஆ) சமூக சேவைகள் அமைச்சின் செயற்பாடுகளுக்காக 04 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.